[8th March 1955

Sugar factories for South Arcot

* 1181 *Q.*—Sri K. ARANGANATHAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the number of applications received so far to open sugar factories in South Arcot district; and

(*b*) the present stage of these applications?

The Hon. Sri M. BHAKTAVATSALAM :—" (*a*) Five, Sir.

" (*b*) The permission granted to the first applicant was revoked in 1952 as he did not take effective steps to set up a factory. Of the four applicants who applied subsequently, one did not evince any further interest in the matter and another has been granted a licence by the Central Government to set up a factory of 800 tons daily crushing capacity. The grantee is taking steps to establish a factory."

Sri K. ARANGANATHAN :—" Sir, who are the applicants and what are the places selected for installing this factory? "

The Hon. Sri M. BHAKTAVATSALAM :—" ஏற்கெனவே மனுப்போட்டவர்களின் பெயர்கள் பின்வருமாறு :

(1) ஸ்ரீ ஆர். வெங்கடசுப்பா ரெட்டியார், அட்வகேட், திண்டிவனம்.

(2) ஸ்ரீ எஸ். சக்கரபாணி, கடலூர்.

(3) ஸ்ரீ அஜேமோஹன் செய்த்தான், மதராஸ்.

(4) ஸ்ரீ ஆர். வெங்கடசுப்பா ரெட்டியார், சூலங்குறிச்சி.

(5) East India Distilleries and Sugar Factories, Limited, Madras, இப்பொழுது மத்திய அரசாங்கம் லைசென்ஸ் கொடுத்து வேலை நடைபெறுவது East India Distilleries and Sugar Factories, Limited, Madras."

Sri V. K. RAMASWAMI MUDALIYAR :—" Can the Hon. Minister tell us whether he would give permission for starting of more factories if people come forward with applications? "

The Hon. Sri M. BHAKTAVATSALAM :—" Applications are considered on their individual merits, Sir."

Sri A. RATNAM :—" தென் ஆற்காடு மாவட்டத்திலே நெல்லிக்குப்பத்தில் ' ஈஸ்ட் இந்தியா டிஸ்டிலெரீஸ் ' என்று ஒரு சர்க்கரை ஆலை இருக்கிறது. மேலும் ஒரு சர்க்கரை ஆலைக்கு ' பெர்மிட் ' கொடுக்க வேண்டிய அவசியம் என்ன ? அங்கே தொழிலாளிகள் வேலையில்லாமலிருக்கிறார்கள். ஆறு மாதத்தில் ஏறக்குறைய 1,500 தொழிலாளிகளுக்கு வேலை கிடையாது. அப்படியிருக்கும்போது, அதே கம்பெனிக்கு ஏன் ' பெர்மிட் ' கொடுக்கவேண்டும் ? "

The Hon. Sri M. BHAKTAVATSALAM :—" நெல்லிக்குப்பத்தில் இருக்கும் ஆலை உபயோகப்படுத்திக் கொள்ளக்கூடிய கரும்பைவிட அதிகமாக கரும்பு உற்பத்தி ஆகிறது. கரும்பு உற்பத்தியாளர்களும் மற்றொரு ' பாக்டரி ' வேண்டுமென்று வற்புறுத்தி வந்தார்கள். எந்த நபருக்குக் கொடுப்பது என்பது இப்போதைய பிரச்னையல்ல. ஆகவே, நெல்லிக்குப்பம் ' பாக்டரி ' தொழிலாளர்களைப் பொறுத்த மட்டில் அவர்களுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாது என்றுதான் சொல்லுகிறேன்."

8th March 1955]

SRI M. KALYANASUNDARAM :—" தொழிலாளிகளைப் பாதிக்காவிட்டாலும், விவசாயிகளையும் பொதுமக்களையும் பாதிக்கின்றது. கனம் மந்திரி அவர்கள் குறிப்பிட்ட கம்பெனி வெள்ளைக்காரக் கம்பெனி. தமிழ் நாட்டில் இருக்கிற சர்க்கரை ஆலைகள் பூராவும் எற்கெனவே அந்தக் கம்பெனி கையில் இருக்கிறது. மேலும் அவர்களுக்கே 'லைசென்ஸ்' கொடுப்பது, அவர்கள் இஷ்டம்போல் கரும்பு விலையைக் குறைக்கவும், கரும்பு விலை குறைந்தாலும் சர்க்கரை விலை குறையாமலிருப்பதற்கும், அதிக லாபம் சம்பாதிப்பதற்கும் எதுவாயிருக்கும். ஆகவே, இதை ஒரே கம்பெனிக்கு 'மானாப்பொலி' ஆக்கி விடாமல், இந்த வெள்ளைக்காரக் கம்பெனிக்குக் கொடுக்காமல். வேறு தமிழ் நாட்டிலுள்ளவர்களுக்குக் கொடுப்பதற்கு நம்முடைய சர்க்கார் முன் வருவார்களா ?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" இந்த லைசென்ஸ் கொடுக்கும் விஷயத்தை மத்திய அரசாங்கமே முடிவு செய்கிறது. ஆகவே பார்லிமெண்டில் ஒரு கேள்வி கேட்டால், அங்கே மத்திய அரசாங்கத்தார் பதிலளிக்கமுடியும். இந்த லைசென்ஸை வெள்ளைக்காருக்குக் கொடுத்த காரணம், எனக்குத் தெரிந்தவரையில் வேறு ஒருவரும் இதை எற்று நடத்த முன் வரவில்லை. விவசாயிகள் இன்னுமொரு பாக்டரி அவசியம் வேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டு வந்தார்கள். இந்த நிலையிலேதான் அந்த கம்பெனிக்கு 'லைசென்ஸ்' கொடுக்கப்பட்டிருக்கிறது."

SRI V. R. NAGARAJAN :—" It has been settled that the Sugar Factory is to be located in Kolianur near Villupuram. What happened to the other applicants? What are the conditions laid down for the grant of licences? And why those applications from individuals have not been granted?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" Licences were issued, but the licensees did not proceed with it and therefore, it is, another licence was issued to this concern."

SRI S. SWAYAMPRAKASAM :—" சர்க்கரை ஆலைக்கு 'லைசென்ஸ்' கொடுப்பது மத்திய சர்க்கார் வேலை என்று கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். இந்த ராஜ்ஜியத்தில் ஆலைகளை நிறுவுவதற்கு மத்திய அரசாங்கம் 'லைசென்ஸ்' கொடுப்பதென்றால், இந்த அரசாங்கத்தைக் கேட்காமல் கொடுக்கிறார்களா ? அப்படி இந்த அரசாங்கத்தை கேட்டால் இந்த அரசாங்கம் யாரைச் சிபாரிசு செய்தது ? இந்த அரசாங்கத்தைக் கேட்கவில்லை யென்றால், இந்த ராஜ்யத்தில் ஏற்படும் ஆலைகளுக்கு இந்த ராஜ்யத்தைக் கேட்டுத்தான் செய்யவேண்டுமென்று நமது சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்துவார்களா ?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" இம்மாதிரி 'லைசென்ஸ்' கொடுக்கும் விஷயத்தில் ராஜ்ய அரசாங்கம் தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொண்டுதானிருக்கிறது. மத்திய அரசாங்கமும் கேட்டிருக்கிறார்கள். முடிவு செய்வது மத்திய அரசாங்கம். ஆகவேதான் முழு விபரங்களையும் பார்லிமெண்ட் சபையில் ஒரு கேள்வி போட்டுத்தெரிந்து கொள்ளலாம் என்று சொன்னேன். இந்த அரசாங்கம் அதன் பொறுப்பைத் தட்டிக் கழிக்கவில்லை. இதற்கு முன்பு 'லைசென்ஸ்' வாங்கினவர்கள் ஒருவரும் நடவடிக்கைகள் எடுக்கவில்லை. மற்றொரு 'பாக்டரி'க்கு அவசியம் இருந்தது. இந்தக் கம்பெனி ஒன்றுதான் அதை நடத்த முன்வந்தது. இந்த அரசாங்கம் ஆட்சேபிக்கவில்லை."

SRI S. C. C. ANTHONY PILLAI :—" Did the Government make a specific recommendation to the Central Government that 9 a.m.

licence should not be issued to the East India Distilleries Company, but should be issued to others who are prepared to start a sugar factory?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—"I do not agree that such a recommendation could be made by Government."

SRI K. PARTHASARATHY :—"In view of the demand by the agriculturists of South Arcot for starting more sugar factories, do the Government propose to help them in the establishment of sugar factories on a co-operative basis?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—"I am unable to understand the purpose of a question like this. If the hon. Member could come forward, take the initiative and formulate a scheme for the formation of a co-operative sugar factory, the Government will certainly give all the support that they can."

SRI S. JAYARAMA REDDIAR :—"இந்த மாதிரி பர்மிட்டுகள் கொடுப்பதற்கு இங்கிலீஷ் கம்பெனிகளுக்கு சலுகை கொடுக்கப்படுகின்றது என்று சொல்லப்படுகின்றது. ஆனால் நம்முடையவர்களுக்கும் பர்மிட் கொடுக்கப்பட்டும் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை, என்பதை மெம்பர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன். கொடைக் கானல் ரோடில் நம்மவர்கள் ஆரம்பித்த கம்பெனியை நடத்த முடியாமல், இங்கிலீஷ்காரர்களிடமே மறுபடியும் கம்பெனியைக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதைப்பற்றிச் சொல்லும்படியாக கேட்டுக் கொள்ளுகிறேன்."

MR SPEAKER :—"The hon. Member may put a separate question."

SRI K. T. RAJU :—"நம்முடைய தமிழ் நாட்டில் இருக்கும்படியான முதலாளிகளால் திறமைக் குறைவால், ஒழுங்காக நடத்தமுடியாது என்றும் ஒரு சந்தர்ப்பத்தில் வெள்ளைக்காரர்களிடம் திருப்பிக் கொடுக்கும்படி நேர்ந்தது என்றும் நண்பர் ஜெயராம ரெட்டியார் அவர்கள் கூறினார்கள். ஆகவே அவர்களுக்கு திறமையை உண்டாக்கி, ஆவன செய்வதற்கு அரசாங்கத்தார் உதவி செய்வார்களா?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—"இன்னும் வேறு ஜில்லாக்களிலிருந்தும் இம்மாதிரியான கம்பெனிகளை நடத்துவதற்கு திறமையானவர்கள் முன்வந்தால், இந்த ராஜ்யத்திலுள்ளவர்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் யோசிக்கும்."

SRI S. PANCHAKSHARAM :—"Arising out of the answer given by the Hon. Minister to a question put by hon. Member Sri K. Parthasarathy, may I know why the Government should not issue licences to the co-operative factories as they have done in North Arcot?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—"The issue of a licence to a co-operative sugar factory does not arise till the co-operative concern comes into existence."

SRI M. KALYANASUNDARAM :—"மதுரை ஜில்லாவில் தமிழர்களால் ஆரம்பிக்கப்பட்ட சர்க்கரை ஆலை திறம்பட நடைபெறவில்லை என்று கூறினார்கள். அதற்குக் காரணம் தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களில் ஏகபோக ஆட்சியில் இருந்துவரும் அந்நியக் கம்பெனியான

8th March 1955]

பாரி கம்பெனி என்பது அனைவரும் அறிந்ததே. ஆகவே அக் கம்பெனிக்கு அம்மாதிரி ஏகபோகமில்லாமல் தடுப்பதற்கு மத்திய சர்க்காருக்கு நம்முடைய சர்க்கார் சிபார்சு செய்வார்களா ?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—"இங்கே மத்திய சர்க்காரைப்பற்றிய கேள்விகளைக் கேட்பதால் பயன் ஒன்றுமில்லை. ஏதாவது உருப்படியான யோசனைகளைக் சொன்னால் எப்போதும் அதை ஏற்று, அதன்படி நடக்க பார்க்கலாம். ஏகபோகத்தை தடுக்க வேண்டியதுதான். ஆனால் அந்நியர்களே இந்த ராஜ்யத்தில் கூடாது என்று சொல்லக்கூடாது. அப்படியென்றால், ரஷ்யர்களை வைத்துக்கொண்டு நம்முடைய அக்கறையைக் கூட பூர்த்தி செய்து கொள்ளமுடியாது. ஆகையால் அந்நியர்கள் இருக்கவேண்டும். ஆனால் நாம் ஜாக்கிரதையாக இருந்துகொண்டு அவர்களைப் பயன் படுத்திக்கொள்வதில் தவறு ஒன்றுமில்லை."

SRI P. JEEVANANDAM :—"கனம் அமைச்சர் அவர்கள் கூறியது எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. அந்நியர்களை உபயோகப்படுத் திக் கொள்வதில் எவ்வித ஆட்சேபணையும் இல்லை. ஆனால் அந்நிய நாட்டுக் கம்பெனியான பாரி கம்பெனி இங்கிருப்பதினால், எவ்வளவு கோடிக் கணக்கான பணம் இந்நாட்டில் சுரண்டப்பட்டுவருகின்றது என்பதைப்பற்றி கடந்த மூன்று ஆண்டுகளாக திருப்பித்திருப்பிக்கூறிக் கொண்டு வருவது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இந்த ஏகபோக உரிமைதான் இன்று தடுக்கப்படவேண்டுமென்று சொல்லப்படுகிறது. அதைத் தடுக்க முயற்சிப்பார்களா என்பதுதான் கேள்வியே ஒழிய, அந்நியர்களையே ஒழித்து விடவேண்டுமென்பது பிரச்னையல்ல. அதற்கு அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்வார் ?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—"அந்நியர்கள் மட்டு மல்ல. முதலாளிகளாக இருந்தாலும், அல்லது தனிப்பட்டவர்களாக இருந்தாலும், அம்மாதிரி நடக்கும் சுரண்டலைத் தவிர்க்க அரசாங்கம் முயற்சிக்கும். அம்மாதிரி ஏதாவது பாக்டரிகளில் தவறுதல் நடந்தால், அதை அரசாங்கம் எவ்வளவு தூரம் கவனித்து நிவர்த்தி செய்யமுடியுமோ, அவ்வளவு தூரம் செய்து கொண்டுதான் வருகின்றார்கள்."

SRI M. KALYANASUNDARAM :—"ரஷ்யர்களிடத்தில் அக்கறை காட்டப்படுவதாக கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள்."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—"அவ்வாறு சொல்லவில்லை."

SRI M. KALYANASUNDARAM :—"அப்படி சொல்ல வில்லையா ? ரொம்ப சந்தோஷம். ஆனால் ரஷ்யர்களுடைய வருகைக்கு என்ன காரணம் ? அவர்களால் என்ன நடந்து கொண்டு வருகின்றது ? பாரி கம்பெனியால் நாட்டில் என்ன நடந்துகொண்டு வருகின்றது போன்றதையெல்லாம் அறிந்து கொள்ளாமல் தொழில் மந்திரிப் பதவி யை வகிப்பது குறித்து நான் வருந்துகிறேன். ரஷ்யர்கள் அவர்களுடைய எந்திரங்களை 2 சத விகிதம் வட்டியில் கொடுத்து உதவியிருக்கிறார்கள். ஆனால் பாரி கம்பெனியாரோ, அவர்களுடைய எந்திரங்களை வைத்துக் கொண்டு நம்மவர்கள் அதை உபயோகிக்கக்கூட உரிமையில்லாதவாறு தடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த விவரத்தை அறிந்துகொள்ளுமாறு மந்திரியார் அவர்களைக்கேட்டுக் கொள்ளுகிறேன்."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—"கனம் எதிர்க்கட்சி உப தலைவர் அவர்களுக்கு மட்டும் தெரிந்திருக்கலாம். ஆனால் எனக்கு ஒன்றுமே தெரியாது என்று சொல்வது தவறு என்றும், எனக்கும் இதெல்லாம் தெரியும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நெல்லிக்குப்பம் போன்ற இடங்களிலுள்ள சர்க்கரை ஆலைகளை ஊக்குவிப்பதற்கு மத்திய அரசாங்கத்திடம் நம்

சர்க்கார் வேண்டிய சிபார்சுகளை செய்துகொண்டுதான் வருகிறது. வேறு நாட்டவர் சுரண்டாமலும் பார்த்துக்கொண்டுதான் வருகிறது. அப்படி ஏதாவது இருந்தால் அரசாங்கம் கவனிப்பார்கள்."

Sri V. BALAKRISHNAN :—" புதிய ஆலைகளில் புதிய சீனி எப்போது உற்பத்தியாகி வழங்கப்படும் என்பதை மந்திரி அவர்கள் தெரிவிப்பாரா ? "

The Hon. Sri M. BHAKTAVATSALAM :—" ஆலை புதியதே ஒழிய சீனி பழையதுதான். அதனால் புதிய சீனி மேல் மோகம் இருக்கவேண்டிய அவசியமில்லையென்பதை கனம் அங்கத்தினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்."

Sri A. RATNAM :—" தென்னாற்காடு மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள சர்க்கரை ஆலைக்கு சர்க்காரால் எவ்வளவு நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது ? அதோடு இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அந்த ஆலைக்கு நிறைய லாபம் கிடைத்தது. இந்த ஆண்டிலே சென்ற ஆண்டுகளிலே கிடைத்ததுபோல் அவ்வளவு லாபம் கிடைக்கவில்லை. ஆகவே மேற்கொண்டு இன்னும் புதிய ஆலைகளை உண்டாக்கி, அதிக சர்க்கரை உற்பத்தி செய்வதற்கு காரணமென்ன ? "

Mr. SPEAKER :—" நீங்கள் அதே கேள்வியைத் திருப்பித் திருப்பிக் கேட்கிறீர்கள்."

The Hon. Sri M. BHAKTAVATSALAM :—" மான்யங்கள் எதுவும் கொடுக்கப்படவில்லை. மேலும் நாட்டிற்கு இன்னும் அதிகமான சர்க்கரை தேவைப்படுகிறது. ஆகவே உற்பத்தி செய்யப்படுகிறது."

Sri S. RAMALINGAM :— " வடக்கே ஒரு ஊரில் கூட்டுறவு முறையில் சர்க்கரை ஆலைகள் எப்படி வேலை செய்கின்றன என்ற முறைகளையெல்லாம் சினிமாப் படங்கள் மூலமாக காண்பிக்கின்றார்கள். அந்த முறைகளை ஏன் நமது சர்க்கார் பின்பற்றக்கூடாது ? மேலும் கூட்டுறவு சங்கங்கள் அமைத்து, அவைகள் மூலமாக ஆலைகள் நடத்த சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ? "

The Hon. Sri M. BHAKTAVATSALAM :—" கனம் அங்கத்தினர் அவர்கள் கூட்டுறவு முறையில் செய்யலாம் என்று நினைப்பது நலலதுதான. ஆனால் அப்படி எடுத்துக்கொண்டால், அதிலே அரசாங்கத்திற்கு அதிக கஷ்டமிருக்கிறது. ஆகையால் யாராவது சிரத்தை எடுத்துக்கொண்டு நடத்த முன்வந்தால், அதற்கான உதவிகளைக் செய்வதற்கு சர்க்கார் வசதி அளிக்கும்."

Retrenchment of employees of P.C.C. Societies, Malabar

* 1182 *Q.*—Sri M. NARAYANA KURUP : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) how many employees have been retrenched by the Producers'-*cum*-Consumers' Co-operative Societies in Malabar in 1954 ;

(*b*) how many of these societies have passed resolutions sanctioning certain concessions to the retrenched personnel ; and

(*c*) whether the Registrar of Co-operative Societies or the Government have sanctioned the proposals made in those resolutions?

The Hon. Sri A. B. SHETTY :—" (*a*) Two thousand five hundred and sixty-eight employees were retrenched by Producers'-*cum*-Consumers' Co-operative Societies in 1954.

" (*b*) Thirty-seven.